# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.71 /2015**

திரு. மலைச்சாமி,
த/பெ குருசாமி,
202, செட்டிக்குட்டை,
சிந்தகவுண்டன் பாளையம் அஞ்சல்,
சக்தி நகர் வழி,
அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் – 638 315. ........மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி. என்.சாலை,
ஈரோடு – 638 009. ......... எதிர்மனுதாரர்

**ஆணை நாள் : 20–10–2015**

1. திரு. மலைச்சாமி, த/பெ குருசாமி, 202, செட்டிக்குட்டை, அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் அவர்களிடமிருந்து 4.9.2015 அன்று பெறப்பட்ட நாளிடப்படாத மனு மேல்முறையீட்டு மனு எண்.71/2015 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேற்கண்ட மனுவில் மேல்முறையீட்டாளர் அவருடைய ரீ.ச. எண்.894/3B என்ற காலைகளில் உள்ள பூமியில் அமைத்துள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு அவர் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் (MBC) என்ற அடிப்படையில் அவரின் விவசாய மின்இணைப்பு கோரும்

விண்ணப்பத்திற்கு மின் இணைப்பை வழங்க உத்தரவு இடவேண்டும் என்று முறையீடு செய்துள்ளார்.

3. மேற்கண்ட முறையீட்டின் நகல் மேற்பார்வை பொறியாளர், ஈரோடு மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்கும்படி 10.9.2015 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. ஈரோடு மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் 14.8.2015 நாளிட்ட ஆணையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளது.

*"மனுதாரரின் கோரிக்கையையும், அதற்காக கழகத்தரப்பினரது அறிக்கை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றையும் கூர்ந்து ஆராய்ந்து பார்த்ததில் மனுதாரர் திரு. மலைச்சாமி அவர்கள் சிறு குறு விவசாய நீர்ப்பாசன மற்றும் இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் வேம்பத்தி கிராமம் க.ச.எண்.894/3A, 3Bஇல் அமைத்துள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு இயல்பு வரிசையில் விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பதிவு எண்.024/2014–15 நாள் 27.5.2014 அன்று பதிவு செய்துள்ளார்.*

*மின் கழகம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குரிய சிறப்பு முன்னுரிமை திட்டத்தின் அடிப்படையில் இலவச மின் இணைப்பு வழங்குவதற்கு உரிய அனுமதி பெற வேண்டி மனுதாரர் மற்றும் பயனாளிகளின் விவரங்கள் அடங்கிய பட்டியலை 28.8.2014 அன்று தலைமை பொறியாளர் / ஈரோடு மண்டலம் / ஈரோடு அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான உரிய புதிய அரசாணை கிடைக்கப் பெற்றவுடன் வரும் ஆண்டு குறியீட்டிற்கேற்ப அனுமதி வழங்கப்படும் பயனாளிகள் விவரங்கள் அடங்கிய பட்டியலில் மனுதாரர் திரு. மலைச்சாமி அவர்களின் பெயர் இடம் பெற்றால் அதன்படி வரிசைக்கிரமமாக இலவச விவசாய மின் இணைப்பு வழங்க நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படும் என இம்மன்றத்தின் மூலம் இறுதி உத்தரவு வழங்கப்படுகிறது."*

5. மேற்பார்வை பொறியாளர், ஈரோடு மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய 14.10.2015 நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளர் திரு. மலைச்சாமி அவர்களுடன் 9.10.2015 அன்று 3.30 மணிக்கு இசைவிணக்க கூட்டம் நடத்தப்பட்டது என்றும், அவ்வாறு நடந்த இசைவிணக்க கூட்டத்தில் மேல்முறையீட்டாளர் அவர்கள் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் இறுதி அறிக்கையை ஏற்றுக் கொள்வதாகவும் அவருடைய மேல்முறையீட்டு

மனுவைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார் என்று தெரிவித்து அதற்கு ஆதாரமாக மேல்முறையீட்டாளரின் 9.10.2015 நாளிட்ட கடிதத்தையும் சமர்ப்பித்துள்ளார்.

6. எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார் என்று தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டாளரின் 9.10.2015 நாளிட்ட மேற்பார்வை பொறியாளர், ஈரோடு மின்பகிர்மான வட்டத்திற்கு விலாசமிட்ட கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"இன்று 9.10.2015 மதியம் 3.30 மணியளவில் நடைபெற்ற இசைவிணக்கக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். அப்போது தாங்கள் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தையும் நான் திருப்திகரமாகவும் முழு மனதோடும் ஏற்றுக் கொண்டேன். மேலும், மின் குறைதீர்ப்பாளர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு மேல்முறையீட்டிற்காக செல்லும் எனது முடிவை தங்கள் தீர்ப்பு திருப்திகரமாக இருந்ததால் திரும்ப பெற்றுக் கொள்கிறேன். மேலும்,* BC/MBC *சிறப்பு முன்னுரிமையில் விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு புதிய அரசாணை வரும்வரை நான் காத்திருக்கிறேன் என்பதனையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."*

7. மேற்கண்ட கடிதத்தினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது இசைவிணக்க கூட்டத்தில் எதிர்மனுதாரர் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தையும் மேல்முறையீட்டாளர் திருப்திகரமாகவும், முழு மனதுடனும் ஏற்றுக் கொண்டதாகவும் எனவே, மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீட்டிற்காக செல்லும் அவரது முடிவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்று அறிவித்துள்ளார். மேலும், BC/MBC சிறப்பு விவசாய முன்னுரிமையில் விவசாய மின் இணைப்பை பெறுவதற்கு புதிய அரசாணை வரும்வரை காத்திருக்கவும் சம்மதம் தெரிவித்துள்ளார் என்றும் அறிய முடிகிறது.

8. மேல்முறையீட்டாளர் அவருடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.71/2015 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று மின்குறைதீர்ப்பாளரால் தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. மலைச்சாமி,
த/பெ குருசாமி,
202, செட்டிக்குட்டை,
சிந்தகவுண்டன் பாளையம் அஞ்சல்,
சக்தி நகர் வழி,
அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் – 638 315.

2) மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி. என்.சாலை,
ஈரோடு – 638 009.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி. என்.சாலை, ஈரோடு – 638 009.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.